## November 30, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இலங்கையில் 'டித்வா' புயலின் கோரத்தாண்டவத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 153- ஆக அதிகரித்தது. மழை வெள்ள பாதிப்புகளில் சிக்கி மாயமானோரின் எண்ணிக்கை 191-ஆக உயர்ந்தது. இதையடுத்து, நாடு முழுவதும் அவசரநிலையை இலங்கை அரசு அறிவித்தது.
   i. இதையடுத்து, உணவு, மருந்து, நாப்கின் உள்பட 29 டன் நிவாரணப்பொருள்களை இந்திய விமானப் படையின் இரு போர் விமானங்கள் மூலம் இந்தியா அனுப்பியது.
   ii. கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் சேதத்தை டித்வா புயல் ஏற்படுத்திய நிலையில், அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக இலங்கை அதிபர் அனுரகுமார திசநாயக அறிவித்தார். மேலும், சர்வதேச நாடுகளின் உதவியையும் அவர் கோரியுள்ளார்.
   iii. இந்தியாவைத் தொடர்ந்து இலங்கைக்கு உடனடியாக 20 லட்சம் டாலர்கள் (ரூ.17.8 கோடி) நிதியுதவி வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்தது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் உறுதியளித்தார்.
   iv. அதேபோல் இலங்கைக்கு 50 ஆயிரம் டாலர்கள் (ரூ.44 லட்சம்) நிதியுதவி மற்றும் 25,000 கடல் உணவு (டூனா) கேன்கள் வழங்கு வதாக மாலத்தீவு அறிவித்தது.
2. எல்லை கடந்த போதைப் பொருள் கடத்தலுக்கு இந்தியர்களின் ஜிஎஸ்டி தகவல்களை மியான்மரைச் சேர்ந்த நபர்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதாக அமலாக்கத் துறை குற்றஞ்சாட்டியது.
   i. போதைப் பொருள் கடத்தல் தொடர்புடைய பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கில் முதல்முறையாக இந்திய-மியான்மர் எல்லையில் நவ. 27-ஆம் தேதி அமலாக்கத் துறை விசாரணையை தொடங்கியது.
   ii. இதுகுறித்து அமலாக்கத் துறை கூறியதாவது: ஐஸால் மற்றும் சம்பய் (மிஸோரம்), அகமதாபாத் (குஜராத்), அஸ்ஸாமில் உள்ள ஸ்ரீ பூமி (கரீம்கஞ்ச்) ஆகிய பகுதிகளில் பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. அப்போது மியான்மரைச் சேர்ந்தவர்கள் சார்பில் சியூடோஃபெட்ரின் மற்றும் கேஃபின் அன்ஹைட்ரஸ் போதைப் பொருள்களை இந்தியர்கள் கொள்முதல் செய்ததோடு, எல்லை கடந்த போதைப் பொருள் தயாரிப்பு மற்றும் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது.
   iii. மேலும் மெத்தம்பெட்டமைன் மாத்திரைகள் மூலப்பொருள்களை வாங்க இந்தியர்களின் ஜிஎஸ்டி தகவல்களை மியான்மரைச் சேர்ந்த நபர்கள் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதும் உற்பத்திக்கான கண்டறியப்பட்டது.
   iv. மியான்மருடன் 1,643 கி.மீ. தொலைவிலான எல்லையை இந்தியா பகிர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.
3. மத்திய மறைமுக வரிகள் வாரியம் மற்றும் சுங்கத் துறை (சிபிஐசி) தலைவராக இந்திய வருவாய் பணி (ஐஆர்எஸ்) அதிகாரி விவேக் சதுர்வேதி நியமிக்கப்பட்டுள்ளார்.
4. போதைப்பொருளைக் கடத்தி விற்பனை செய்யும் கும்பல்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று காவல் துறை தலைவர்களுக்குப் பிரதமர் மோடி அறிவுறுத் தியுள்ளார்.
   i. நாட்டில் உள்ள டிஜிபிக்கள், ஐஜிக்கள் அடங்கிய காவல் துறை தலைவர்கள் மாநாடு, சத்தீஸ்கரின் ராய்பூர் நகரில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார்.

5. மேற்கு வங்க ஆளுநர் மாளிகையின் பெயரை மக்கள் மாளிகை என்று மாற்றுவதற்கு அம்மாநில ஆளுநர் சி.வி. ஆனந்தபோஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.
   i. இது தொடர்பாக ஆளுநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கடந்த 2023ஆம் ஆண்டுமார்ச் 27ஆம் தேதி மேற்கு வங்க ஆளுநர் வேண்டுகோளின்படி ஆளுநர் மாளிகையின் ஒரு சாவியை முதல்வர் மம்தா பானர்ஜியிடம் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முஒப் படைத்தார்.
   ii. இதைத் தொடர்ந்து மத்திய உள் துறை அமைச்சகம் கடந்த 2025-ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம்தேதி வெளியிட்ட உத்தரவின்படி கொல்கத்தாவில் உள்ள ஆளுநர் மாளிகைக்கும் டார்ஜீலிங்கில் உள்ள ஆளுநர் மாளிகைக்கும் லோக் பவன் (மக்கள் மாளிகை) என்று பெயர் சூட்டப்படுகிறது.
6. வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் சென்னையில் வரும் ஜனவரி இறுதியில் வள்ளலார் பன்னாட்டு மாநாடு நடத்தப்படும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு தெரிவித்தார்.
   i. திரு அருட்பிரகாச வள்ளலார் சுத்த சன்மார்க்க பன்னாட்டு மாநாடு-2026 முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் துறையின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னையில் நடைபெற்றது.
   ii. திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்.5-ஆம் நாளை தனிப் பெருங்கருணை நாளாக கடைப் என முதல்வர் பிடிக்கப்படும் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும், தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம் அமைப்பதற்கு ரூ.99.90 கோடியை வழங்கினார்.
7. நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் டிசம்பர் 1-ஆம் தேதிமுதல் 19-ஆம் தேதி வரை விடுமுறை நாள்கள் நீங்கலாக மொத்தம் 15 அமர்வுகள் கொண்டதாக நடைபெற வுள்ளது. இதில் 10 முக்கிய மசோதாக்களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் இரண்டு மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் பரிசீலனை மற்றும் நிறைவேற்றத்துக்கு தயார்நிலையில் உள்ளன.
   i. 10 மசோதாக்களில் 4 நிதித் துறை தொடர்புடையவை, 2 சட்டம் மற்றும் நீதித் துறை தொடர்புடையவை. கல்வி, எரிசக்தி, போக்குவரத்துத் துறை, உள் துறை ஆகியவை தொடர்பான தலா ஒரு மசோதா அடங்கும்.
   ii. இதில் முக்கியமானவை, சண்டீகர் தொடர்புடைய அரசமைப்புத் திருத்தம், உயர்கல்வி ஆணைய மசோதா, தனியார் பங்களிப்பை வரவேற்க வகை செய்யும் அணுசக்தி மசோதா போன்றவை.
   iii. அணுசக்தி மசோதா: மத்திய அரசு உத்தேசித்துள்ள அணுசக்தி மசோதா, இந்திய அணுசக்திக் கழகம் (என்பிசி ஐஎல்) என்ற பொதுத் துறை ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்பது எதிர்க்கட்சிகளின் கருத்து. இந்த மசோதாவின்படி, கட்டுப்படுத்தப்பட்ட வகையில் தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி மற்றும் பிற பங்கேற்பு வசதி அணுசக்தித் துறையில் அனுமதிக்கப்படும். ஆனால், இந்த நடவடிக்கை, இதுநாள் வரை கட்டிக்காக்கப்பட்டுவந்த நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை சமரசம் செய்வதற்கு ஒப்பாகும் என்கின்றனர் விமர்சகர்கள்.
   iv. உயர் கல்வி ஆணைய மசோதா: இநதிய உயர் கல்வி ஆணைய (யுஜிசி சட்டத்தை ரத்து செய்தல்) மசோதா, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களின் மேற்பார்வையை ஒரே ஒழுங்குமுறை அமைப்பின் கீழ் ஒன்றிணைத்து, அதை யுஜிசி, ஏஐசிடிஇ மற்றும் என்சிடிஇ போன்றவற்றுக்கு மாற்றாக கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தேசிய கல்விக் கொள்கை 2020-இன் படி தரமான கல்வி வழங்கலை நோக்கமாகக் கொண்டது என்பது மத்திய அரசின் விளக்கம். ஆனால், காங்கிரஸ் மூத்த உறுப்பினர் திக்விஜய்

சிங் இது அதிகப்படியான அதிகமாரமயமாக்கல்' என்றும், திமுக மூத்த உறுப்பினர் கனிமொழி, இதை 'பிற்போக்குத்தனமானது' என்றும் விமர்சித்துள்ளனர்.

v. காப்பீடு சட்டங்கள் (திருத்தம்) மசோதா: இதன்படி, காப்பீட்டுத் துறையில் மூலதன வாய்ப்பு எளிதாக்கப்படும். நேரடி உரிமம் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் துறையில் முதலீடு செய்வது அதிகரிக்கும். ஆனால், இது ஆபத்தான விளைவு என்கின்றன காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள்.

vi. இதேபோல, தொழில் செய்வதை எளிதாக்கும் வகையில் கார்ப்பரேட் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, மத்திய ஜிஎஸ்டி திருத்த மசோதா அவசர சட்டத்துடன் ஒத்துப்போகும் அவசர சட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய மணிப்பூர் சரக்கு மற்றும் சேவை வரி (திருத்தம்) மசோதா போன்றவற்றை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

vii. போக்குவரத்துத் துறை அறிமுகப் படுத்தவுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் (திருத்தம்) மசோதா மூலம் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல் முறை எளிதாக்கப்படும் என்கிறது மத்திய அரசு. ஆனால், சீரான இழப்பீடு என்ற சட்டப் பிரிவு, நிலங்களை வழங்கும் விவசாயிகளுக்கு எதிரானது என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

viii. மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் அரசமைப்பின் 131-ஆவது திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்படி, சண்டீகர் யூனியன் பிரதேசத்தில் குடியரசுத் தலைவரே நேரடியாக சட்டத்தை இயற்ற இயலும். பஞ்சாப் கட்டுப்பாட்டில் இருந்து சண்டீகர் நிர்வாக முறையை மாற்ற இது வகை செய்யும். இந்த நடவடிக்கை, 'பஞ்சாப் உரிமைகள் மீதான நேரடித் தாக்குதல், கூட்டாட்சியின் அடிப்படைக்கொள்கைகளை மீறுகிறது' என்கிறது பஞ்சாபின் சிரோமணி அகாலி தளம். இத்தகைய மசோதாக்களை குறுகிய நாள்களில் விவாதித்து நிறைவேற்றுவது இயலாத விஷயம் என்பது எதிர்க் கட்சிகளின் வாதம். இது மறைமுகமாக கூட்டாட்சி முறையை நசுக்கும் ஆளும் கூட்டணி அரசின் தந்திரம் என்பதால், இதை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கும் என்கிறார் திரிணமூல் காங்கிரஸ் மாநிலங்களவைத் தலைவர் டெரிக் ஓபிரையன்.

8. இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளில் கடந்த வாரம் அளவுக்கு அதிகமாக பெய்த பருவமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவும் ஏற்பட்டன. இவற்றில் சிக்கி உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 460-ஐ கடந்துள்ளது.

9. ஆஸ்திரேலியப் பிரதமர் ஆன்டனி ஆல்பனேசிக்கும் (62) அவரது துணைவி ஜூடி ஹேடனுக்கும் (47) திருமணம் நடைபெற்றது.
   i. 124 ஆண்டுகால ஆஸ்திரேலிய கூட்டாட்சி வரலாற்றில் பதவியில் இருக்கும்போது பிரதமர் ஒருவருக்கு திருமணம் நடைபெறுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.